பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 07 2024 **WEDNESDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் உற்பத்தித்துறை முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

2. இளையோர் நலனுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. சுகாதார சேவைகளை வழங்குவதில் தொழில்நுட்பம் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. **Swiss** ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-இனி விரிவான செய்திகள்--

<><<<<>>><>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்குகளை எட்டுவதில் உற்பத்தித்துறை முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதனை கருத்தில்கொண்டு, உற்பத்திக்கான இந்தியா இயக்கத்திற்கு கூடுதல் உத்வேகம் அளிக்கப்படும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மின்னணு பொருட்கள் துறையில் உற்பத்திக்கான முனையமாக இந்தியாவை உருவாக்கும் நோக்கில், நித்தி ஆயோக் ஒருங்கிணைந்த அறிக்கையை நாளை புதுதில்லியில் வெளியிட உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><<<<>>><>

இளையோரின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

தேசிய இளையோர் விருது பெற்றவர்களுடன் இன்று புதுதில்லியில் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டின் எதிர்காலத்திற்கான அடித்தளம் இளையோர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனை கருத்தில்கொண்டே இளையோர் நலனுக்கான திட்டங்களுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<><<<<>>><>

சத்தீஸ்கர் முதலமைச்சர் திரு **Vishnu Deo Sai**, துணை முதலமைச்சர் திரு விஜய் சர்மா அகியோர் இன்று புதுதில்லியில், ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவை சந்தித்து பேசினர்.

மாநிலத்தின் ரயில்வே திட்டங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக முதலமைச்சர் அலுவலகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. பல்வேறு திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<><<<<>>><>

ரயில்வேத் திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசோடு இணைந்து மாநில அரசுகள் செயல்பட வேண்டும் என்று ரயில்வே இணையமைச்சர் திரு சோமண்ணா கேட்டுக்கொண்டுள்ளார்

இன்று மங்களூருவில் ரயில்வே திட்டங்களின் செயலாக்கம் குறித்து சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

மக்களுக்கான போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு சோமண்ணா தெரிவித்தார்.

<><<<<>>><>

சுகாதார சேவைகளை வழங்குவதில் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சுகாதாரத்துறையில் புரட்சிகரமான மாற்றங்களை தொழில்நுட்பங்கள் ஏற்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பம் சுகாதார சேவைகளை வழங்குவதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

மருந்து உற்பத்தியில் முன்னணி நாடாக இந்தியா திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் டாக்டர் ஜிதேந்திர சிங் பட்டியலிட்டார்.

<><<<<>>><>

சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் சங்க பிரதிநிதிகளுடன் மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி இன்று ஆலோசனை நடத்தினார்

தமது இல்லத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனையின்போது, பெட்ரோலுடன் எத்தனாலை கலப்பது, பசுமை ஹைட்ரஜன், உயிரி நெகிழி பொருட்கள் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.

மாற்று எரிசக்தி பயன்பாட்டை அதிகரிப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அமைச்சர் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அம்சங்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<><<<<>>><>

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

முதியோர் ஓய்வூதியத்திற்கான நிதி ஒதுக்கீடு முந்தைய அஇஅதிமுக ஆட்சிக்காலத்தைவிட ஆயிரத்து 250 கோடி ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தென் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 14 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 541 கோடி ரூபாய் அளவிற்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<><<<<>>><>

கர்நாடகாவில் நேரிட்ட நிலச்சரிவில் ஏழு பேர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுவதாக அம்மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு **Krishna Byre Gowda** கூறியுள்ளார். செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், தேசிய நெடுஞ்சாலை 66-ல் இந்த நிலச்சரிவு ஏற்பட்டதாக கூறினார். உயிரிழந்தவர்களில் நான்கு பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<><<<<>>><>

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில், சிபிஐ கைது செய்ததை எதிர்த்து, தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பினை, தில்லி உயர்நீதிமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்துள்ளது.

இதற்கிடையே, திரு அரவிந்த் கெஜ்ரிவாலின் ஜாமின் மனு வரும் 29-ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தில்லி உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

**<><<<<>>><>**

மொரிஷியஸின் முன்னாள் பிரதமர்கள் டாக்டர் **Navin Ramgoolam** மற்றும் **Paul Berenger** ஆகியோருடன், வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் இன்று பேச்சு நடத்தினார்.

அரசு முறைப்பயணமாக மொரிஷியஸ் சென்றுள்ள அவர், இன்று இருதலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்தியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் மற்றும் சர்வதேச பிரச்சினைகள் இந்த பேச்சுவார்த்தையில் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<><<<<>>><>**

மகாராஷ்ட்ராவில் 10 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் **Gadchiroli** –ல் ஒருங்கிணைந்த எஃகு உற்பத்தி நிறுவனத்துக்கான கட்டுமானப்பணிகள் இன்று தொடங்கப்பட்டுள்ளதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், நாட்டில் உற்பத்தி செய்யப்படும் எஃகு-வில் 30 சதவீதம் **Gadchiroli** –ன் பங்காக இருக்கும் என்றார்.

இந்த ஒருங்கிணைந்த உற்பத்தி நிறுவனத்தின் மூலம் உள்ளூர் மக்களுக்கும், பழங்குடியினருக்கும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் திரு தேவேந்திர பட்நவிஸ் தெரிவித்தார்.

**<><<<<>>><>**

வடகொரியாவின் அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்கான தயார் நிலையில் நமது பாதுகாப்புப்படைகள் இருக்க வேண்டும் என்று தென்கொரியாவின் பாதுகாப்பு அமைச்சர் **Shin Won Sik** வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்பு தளபதிகளுடன் நடத்திய ஆலோசனையின்போது அவர் இவ்வாறு கூறியதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

**<><<<<>>><>**

நாட்டின் ஒரு சில பகுதிகளில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கர்நாடகா மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை வரை அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும், அடுத்த மூன்று தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் நாளை மறுநாள் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<><<<<>>><>**

*விளையாட்டுச் செய்திகள்*

**Swiss** ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது. ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-4 என்ற செட் கணக்கில், **Bolivia–**வின் **Boris Arias – Federico Zeballos** இணையை வென்றது.

-------------------

ஜெர்மன் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளது. ஆடவர் இரட்டையர் பிரிவு மூன்றாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 4-6, 6-2, 10-8 என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் **Sergio Martos Gornes – Jaume Munar** இணையை வென்றது.

----------------------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Shaurya Bawa** வெண்கலப்பதக்கம் வென்றார். அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------------

மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப்பட்டியலின் பேட்டிங் பிரிவில், இந்தியாவின் ஹர்மன் பிரீத் கவுர் 12-ஆவது இடத்திற்கும், **Shefali Verma** 15-ஆவது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.

-------------

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் 117 பேர் பங்கேற்கின்றனர்.

தடகள பிரிவில் 29 பேரும், துப்பாக்கிச்சுடும் பிரிவில் 21, பேரும், ஹாக்கிப்போட்டியில் 19 பேரும், டேபிள் டென்னிஸ் போட்டியில் 8 பேரும், பேட்மிண்டன் போட்டியில் 7 பேரும், மல்யுத்தம், வில்வித்தை, குத்துச்சண்டை போட்டிகளில் தலா 6 பேர் பங்கேற்கின்றனர்.

போஃல்ப் போட்டியில் 4 பேரும், டென்னிஸ் போட்டியில் 3 பேரும், நீச்சல் போட்டியில் இருவரும் இந்தியா சார்பில் பங்கேற்கவுள்ளனர். பாரிஸ் ஒலிம்பிக் போட்டி வரும் 26-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 11-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**<><<<<END>>><>**